# லைசென்ஸ் இல்லாத சாலையோர அங்காடி வியாபாரிகளை முறைப்படுத்த

# கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் 4 மாதத் திட்டம்



கோலாலம்பூர், ஏப். 18- நாட்டின் தலைநகரில் ரெம்போ என்று பிரபலமாக அழைக்கப்படும் லைசென்ஸ் பெற்றிராத சாலையோர அங்காடி வியாபாரிகளை முறைப்படுத்துவதற்கு கோலாலம்பூர் மாநகர் மன்றத்திற்கு (டிபிகேஎல்) 4 மாத காலம் அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது.

அங்காடி வியாபாரிகளிடையே குறிப்பாக சிறு அளவிலான வியாபாரிகள், அங்காடி வியாபாரிகளுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் அணுகுமுறையாக இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று பிரதமர் இலாகா கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ஸலிஹா முஸ்தாபா கூறினார். இவர்கள் வணிக லைசென்ஸ் பெறுவதில் உதவிடும் நடவடிக்கை இந்த 4 மாத கால திட்டத்தில் அமல்படுத்தப்படும். கோலாலம்பூரில் வியாபாரம் செய்வதற்குரிய லைசென்ஸுகளுக்கு விண்ணப்பம் செய்வதற்கு லைசென்ஸ் வைத்திராத வியாபாரிகள் முன் வந்து டிபிகேஎல்- இல் தங்களை பதிந்துகொள்வதற்கு ஆகஸ்டு மாதம் வரை அவகாசம் வழங்கப்படுகிறது. இந்த நடைமுறையில் உதவுவதற்கு அமைச்சு கடப்பாட்டைக் கொண்டிருக்கிறது என்று அமைச்சர் தெரிவித்தார்.

இருப்பினும் விண்ணப்பம் செய்யும் அனைவருக்கும் லைசென்ஸ் கொடுக்கப்பட மாட்டாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். விண்ணப்பங்கள் முறையாக பரிசீலிக்கப்பட்டு தகுதி உள்ளவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்படும். டிபிகேஎல் அங்காடி வியாபார சுற்றுச்சூழலை முழுமையாக உருமாற்றம் செய்து வியூக தீர்வுகளை காண வேண்டியது அவசியமாக இருக்கிறது என்று இங்கு டத்தாரான் டிபிகேஎல் -இல் நடைபெற்ற ஹரிராயா உபசரிப்பில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய டாக்டர் ஸலிஹா கூறினார்.

மாநகரில் லைசென்ஸ் வைத்திராத அங்காடி வியாபாரிகளின் உண்மையான எண்ணிக்கை அமைச்சிடம் இல்லை. இருப்பினும்இந்தமுறைப்படுத்துதல் நடவடிக்கையின் கீழ் தெளிவான தரவுகள் எண்ணிக்கைகள் கிடைக்கப்பெறும் என்று தாம் நம்புவதாக அவர் சொன்னார்.

ஓர் அங்காடி வியாபாரி லைசென்ஸ் பெறுவதற்கு அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டியது கட்டாயமாகும். விரும்பிய இடத்தில் வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும் பொதுமக்களின் பாதுகாப்பிற்கு இடையூறாக இருப்பதையும் அனுமதிப்பதற்கில்லை என்று டாக்டர் ஸலிஹா தெரிவித்தார்.